**O.S.No.51/2017**

**தேதி: 31.10.2023.**

**பி.வா.சா.2: ( திருமதி. கீதா த/பெ. சுப்பிரமணி)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அரும்பாக்கத்தில் என் அப்பா பெயரில் உள்ள சொத்திற்கு எந்த வருடம் பஞ்சாயத்து நடந்தது என்றால் 2002-ல் நடந்தது. பஞ்சாயத்து யார் முன்னிலையில் நடந்தது என்றால் குப்புசாமி மற்றும் அரும்பாக்கம் ஊர் பொது மக்கள் முன்னிலையில் நடந்தது. மேற்கண்ட பஞ்சாயத்து சங்கதியை என்னுடைய பதில் உரையிலும், பிரமாணப்பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரி தான். இந்த வழக்கில் அக்கா பானுவை பி.வா.சா.1 ஆக விசாரணை செய்தார்கள் என்றால் சரி தான். அவர் நீதிமன்றத்தில் என்ன சங்கதிகள் சொன்னார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

என் அப்பா குப்புசாமியிடம் எந்த தேதியில், எவ்வளவு தொகை கடன் வாங்கினார் என்ற விவரத்தை என்னுடைய பதில் உரையிலும், பிரமாணப்பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் என் அப்பா இறப்பதற்கு முன்பு ரூ.3,00,000/-மும், என் அப்பா இறந்தபிறகு என் திருமணத்திற்காக ரூ.1,00,000/-மும் என்று சொல்லியுள்ளேன். மேற்கண்ட கடன் சங்கதியை என்னுடைய பதில் உரையில் சொல்லாமல் பிரமாணப்பத்திரத்தில் மட்டும் சொல்லி அதன் அடிப்படையில் தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரி தான்.

குப்புசாமி என்னுடைய பெரியப்பா. அவரிடம் கடன் வாங்கியது சம்பந்தமான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் உள்ளது. வழக்கறிஞரிடம் கொடுத்து வைத்துள்ளோம்.

அரும்பாக்கத்தில் உள்ள சொத்து விற்கப்பட்டதா என்றால் விற்றுவிட்டார்கள். எந்த தேதியில் விற்கப்பட்டது என்றால் என் அம்மா இறந்த பிறகு தான் விற்கப்பட்டது. 2009க்கு பிறகு தான் விற்கப்பட்டது. யார் விற்றது என்றால் என் அண்ணன் முருகன் மட்டும் விற்றார். யார் எல்லாம் கையொப்பம் போட்டார்கள் என்றால் முதலில் முருகன் கையொப்பம் போட்டு விற்ற பிறகு கடைசியாக மைனர் பிள்ளைகளிடம் எதுவும் தெரிவிக்காமல் கையொப்பம் பெறப்பட்டது.

பத்திரத்தை காப்பி போட்டு வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. விற்ற சொத்தை முருகனும் மற்றொரு அண்ணன் வாரிசுகள் சேர்ந்து தான் விற்றார்கள் என்றால் நான் அதை பார்க்கவில்லை. விற்கப்பட்ட அரும்பாக்கம் சொத்திற்கு இந்த வழக்கு இல்லை என்றால் சரி தான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு 29.6.2018 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகள் நாங்கள் வாதிக்கும் கிரயம் பெற்ற பச்சையப்பன் மற்றும் சுரேஷிற்கு அனுப்பினோம் என்றால் சரி தான். அதன்பின்னிட்டு அரும்பாக்கம் சொத்தில் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி தான்.

என் அம்மா தாவா சொத்தை பொறுத்து ஆவணம் எதாவது எழுதி வைத்தாரா என்றால் எழுதி வைக்கவில்லை. என் அம்மா இறந்தபிறகு வாரிசு சான்று பெற்றுள்ளோம் என்றால் சரி தான். அந்த வாரிசு சான்றை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். வாரிசு சான்றை இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். என் அம்மா சொத்து சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் 2008-க்கு முன்பு என் அம்மா உயிருடன்

இருக்கும்போது ஒருமுறை நடந்தது. மேற்படி பஞ்சாயத்து குறித்து எங்களுடைய பதில் உரையில் சொல்லவில்லை என்றால் சரி தான். 2008க்கு முன்பு நடந்த பஞ்சாயத்தின்போது முருகன் திருவண்ணாமலையில் இருந்தார் என்றால் சரி தான். பஞ்சாயத்திற்கு முருகன் வந்தாரா என்றால் வந்தார். பஞ்சாயத்து சம்பந்தமாக வாதியிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் பெறப்படவில்லை.

2008க்கு முன்பு நான் சொல்வது போல் எந்தவொரு பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றாலும், முருகன் வரவில்லை என்றாலும், தாவா சொத்தில் வாதிக்கு பாகம் கிடைக்கக்கூடாது என்பதற்காக பஞ்சாயத்து நடந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional District Judge,
Fast Track Court, Arani.